உ

சிவமயம்

கண்கொடுத்தவனிதம்

# நயனவரதர் மாலை

திருப்பணிச்செல்வர்

கா. சோ. சுப்பிரமணிய முதலியாரவர்கள்

இயற்றியது

உறையூரைச் சார்ந்த திருத்தாந்தோன்றி

திருவேங்கடசாமி பிள்ளையவர்கள்

வேண்டுகோளால்

திருப்பரங்குன்றம்

அ. நாராயணசரணரால்

தஞ்சை :

கல்யாணசுந்தரம் முத்திராசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

1912

அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
சீர்காழி.
(1982)

உ

கணபதிதுணை

## கண்கொடுத்தவணிதம்

# நயனவரதர்மாலை.

## காப்பு

குளிர்புனல்சூழுங்கண்கொடுத்தவணிதத்தொண்
டளியுணயனவரதப்பே—ரளியினன்மேற்
பத்தியுடன்முப்பதுவெண்பாமாலைபாடவெனக்
கத்திமுகத்தெந்தாயருள்

விரதமறையோர்பரவவேண்டுநயன
வரதனையான்பாடவரந்தந்—தருளுதியாற்
பொன்னிமையவல்லிபுகழ்த்தேவநாயகிநற்
கண்ணிதருங்காதன்முருகா

செல்லேய்பரங்குன்றுசீரலைவாய்தென்பழனி
தொல்லேரகங்குன்றுதோருட—லெல்லேய்
பழமுதிர்சோலைக்குமரன்பங்கேருகப்பூங்
கழலிணையைநெஞ்சேகருது

### அவையடக்கம்

வெள்ளைமதிகொள்ளச்சைவிண்ணதனினீட்டுசிறு
பிள்ளைமதிபோலாகும் பேதையேன் — கிள்ளைமொழி
நங்கையருட்டேவநாயகிபங்காளனையெஞ்
சங்கரனைப்போற்றவெண்ணுதல்

## நூல்.

கோலமறைசேர்கண்கொடுத்தவணிதத்தங்கண்
ஞாலமருளுந்தேவநாயகியோர் — பாலமருஞ்
சிற்பரவிந்தப்பணியுஞ்செஞ்சடையாய்நாயேற்குன்
பொற்பரவிந்தத்தாள்புகல் (௧)

உடையானையன்பர்க்குரியானைச்சூலப்
படையானைமுக்கட்பரனை — விடையூருங்
கொற்றவனைநற்கண்கொடுத்தவணிதத்தசலா
துற்றவனைநெஞ்சேயுணை (௨)

புற்றரவம்பூண்டோன்புரமதனைப்புன்னகையாற்
செற்றபிரானெங்கள்சிவபெருமான் — மற்றசலு
நற்றவரைக்காக்குநயனவரதன்கருணை
பெற்றவருக்குண்டோபிறப்பு (௩)

கடுத்திகழுநீலமணிகண்டன்புலித்தோ
லுடுத்தபெருமானன்னவூர்தி — நடுத்தலையைக்
கொய்தவன்வாழுங்கண்கொடுத்தவணிதத்தைவலஞ்
செய்தவருக்குண்டாஞ்சிறப்பு (௪)

ஆங்கணைசங்காளசிவனையானனவரவ
கங்கணவென்றால்வினையின்கட்டறுமே—பொங்கு
நதியணியும்வேணிநயனவரதன்சந்
நிதியணுகிநெஞ்சமேநீ (௫)

கருநாகமென்னக்கடாமிசைவன்காலன்
வருநாளென்முன் விடைமேல்வந்தா—ளொருநான்
முகனாரணன்றேடுமுன்னவாகாம
தகனாநயனவரதா (௬)

விண்டயன்விண்ணோர்முதலோர்வீயாமற்றீயவிட
முண்டருளுமெண்டோளொருவன்காண்—டண்டலையிற்
கொண்டல்படியுங்கண்கொடுத்தவணிதத்தன்பர்
கண்டடையுமெஞ்சங்கரன் (௭)

ஆதியனையம்மையருட்டேவநாயகியோர்
பாதியனையாவும்பரிப்பவனைச்—சோதிமணிக்
கோயிலுளானைக்கண்கொடுத்தவணிதத்தவனைப்
போயிறைஞ்சிநெஞ்சேபுகழ் (௮)

போதமர்வோன்றன்வாழ்வும்பொன்னுலகத்தோன்வாழ்வுஞ்
சீதரன்வாழ்வுங்கொடுக்குஞ்சீமான்காண்— பூதரவான்
குன்றைவளைக்குங்கண்கொடுத்தவணிதத்திறைவன்
கொன்றைமலர்க்கண்ணியனெங்கோன் (௯)

பையரவின்வாயிலகப்பட்டழியுந்தேரையென
வெய்யபிணிக்காளாய்வெறுமையே—னைய
விடுத்தாயதுமுன்வினையேனுநீயே
தடுத்தாணயனவரதா (௰)

கந்தமலிபூங்குழலார்கண்வலையிற்சிக்கியல
மந்தலைபுந்துட்டமடநெஞ்சே—யந்தணர்கள்
கூடிவணங்குங்கண்கொடுத்தவணிதத்தரனை
நாடின்வினையுண்டோநவில் (சக)

ஞாலமினிதேத்துநயனவரதன் மருவு
மாலயநன்சோங்கவமைப்பவரெக்—காலு
மயன்கையுருர்வல்லியமற்காளாய்மெலியார்
வியன்னகலைசேர்வார்வியந்து (சஉ)

உன்றோர்குழவிக்கவிர்கண்கொடுத்தபிரா
னென்றோடிவந்தேனிறைவனே—யின்றேழை
துன்பந்தொலைத்துனதுதொண்டர்ச்சாளாக்கினையே
லின்பம்பெறுவேனினி (சங)

புரதகனவேதம்புகலுநயன
வரதகனகத்தில்லைவாண—பரதவருக்
கன்றுமையைப்பெண்ணுவளித்துமணஞ்செய்தவவென்
றின்றுதுதித்தெண்ணுமனமே (சச)

நத்தனயன்போற்றுநயனவரதப்பெயர்சொ
ளுத்தமன்வெங்கூற்றைப்புதைகழலைச்—சித்தமதிற்
கொண்டார்சதிபெறலுங்கொள்ளாதவரென்டோற்
றிண்டாடலுஞ்சத்தியம் (சரு)

நாயிற்கடையேனைநற்குரவாற்செல்வர்கடை
வாயிற்படிநின்றுவாடாதுன்—கோயிற்
பணிவித்துன்றுளடையப்பார்கண்கொடுத்த
வணிதத்தில்வாழுமுதல்வா (சசா)

துன்பக்கடலுழலுந்தொல்வினையோன்முத்தியெனு
மின்பக்கரையேறவெண்ணுவையோ—வன்பர்க்
கெளியாய்சுரர்க்கரியாயெங்குமுளாயம்பொற்
றளியாய்நயனவரதா (கஎ)

மாயமிகுவன்மைமகிடாசுரற்கொன்ற
வேயனையபைந்தோள்வியன்றேவ—நாயகியாங்
கொம்பினுடனெண்கண்கொடுத்தவணிதத்தமரு
மெம்பெருமான்மூவர்க்கிறை (கஅ)

அடலுற்றவந்தகனையட்டான்றிருப்பாற்
கடலிற்றுயிலுங்கருமா—லிடபக்
கொடிகொண்டான்வாழ்கண்கொடுத்தவணிதத்திற்
குடிகொண்டார்க்குண்டோகுறை (கசு)

கன்னியர்கள்காமக்கடலிலழுந்தாவகைநின்
பொன்னினிலங்குந்தாட்புணைதந்தாள்—சென்னி
யலைவானதியிலராவம்புலியோடாடுந்
தலைவாநயனவரதா (உ௰)

வாழுமணிக்கோயில்வலஞ்செய்துசந்நிதியிற்
ருழுமவர்தாளென்றலைக்கணியாஞ்—சூழும்வயற்
கோகனகஞ்சேர்கண்கொடுத்தவணிதத்துமையாள்
பாகனணிபொன்னம்பலன் (உச)

வெய்யவினையால்விளியாவன்னேயுடனே
வையமிசையையாவகையடியே—னுய்யவொரு
நற்குருவாய்வந்துநயனவரதாநீயென்
றெற்குபதேசிப்பாயினி (உஉ)

பூரியர்நட்புற்றுப்புலைநெஞ்சேயெப்பொழுது
நாரியர்சொற்கேட்பதுவு நன்றாமோ—வேரிமலர்
கொய்தடியார்சேர்கண்கொடுத்தவணிதத்திறையைக்
கைதொழுதாலுண்டாஞ்சதி (உ௩)

நாறுமலர்தூவிநமவென்றெழுத்தைந்துங்
கூறுமடியாருடனேகூட்டினாற்—பேறுசிறு
நாயேனடைவேனயனவரதாவினையால்
வீயேனினிநீவிடேல் (உ௪)

உச்சிமிசைக்கைகூப்பியோநமச்சிவாயவென
நச்சிவழுத்தாதபுலைநாயேனை—யச்சலச
னேதுக்கிவண்விதித்தானெந்தேவநாயகியா
ளாதுக்கினியதுணைவா (உ௫)

பொங்கியவெந்தீயிற்புகும்விட்டில்போன்மடவார்
கொங்கையில்வீழ்ந்தென்றுங்குலையாம—லிங்குனிரு
செந்தாமரைத்தாளைச்சிந்திக்குமாறுவரந்
தந்தாணயனவரதா (உ௬)

நன்னிதியமாமெங்நயனவரதன்கோயிற்
சந்நிதியினின்றேத்துஞ்சற்சனருக்—கென்னிதய
வில்லைக்கொடுத்தேனியமாவெனைக்கறுவிப்
பல்லைக்கடித்தென்டகர் (உ௭)

என்னபிழைசெய்திடினுமின்னருளானீபொறுத்துன்
பொன்னடியிலென்னைப்புகப்புரிவாய்—மன்னுங்
குறைவில்புகழ்சேர்கண்கொடுத்தவணிதத்தின்
மறைபரவுமெங்கள்பரமா (உ௮)

பத்தர்சிவபூசைசெய்யும்பாண்டவராற்றின்வடபாற்
கொத்தலர்சோலைக்கண்கொடுத்தவணி — தத்தமரும்
பொன்னசவிஃலத்தனைமால்போதனறியாதவனை
யென்னகவில்லத்திருத்தினேன் (உக)

வந்திறைஞ்சிநின்றுவழுத்துவார்வேண்டும்வரந்
தந்திடர்தீர்த்தாளுந்தயாபரன்கா — ணந்தன்ன
மடுத்தரளநந்தொண்மலரிலுயிர்க்குங்கண்
கொடுத்தவணிதத்தமரெங்கோன் (௩௰)

---

இப்பிரபந்தத்தைத் தினந்தோறும் அன்புடனே துதிப்பவர்களுக்குக் கண்ணோய் முதலிய எல்லா நோயும் நீங்குமென்பது மேலோர்களின் கருத்தாம்.